தமிழர் இயக்கம்
Tamil Movement
Bewegung der Tamilen
Mouvement des Tamouls
Movimento dei Tamil

# ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 38 ஆவது கூட்டத்தொடரில் தமிழர் இயக்கம் முன்னெடுத்த வேலைத்திட்டங்கள்



## ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தமிழர் உரிமைகள் சார்ந்து இன்று நிலவும் சூழல்

கடந்த 18.06.2018 அன்று மனித உரிமை ஆணையாளரால் உலகளாவியரீதியில் பல்வேறு நாடுகளின் தற்போதைய மனித உரிமை நிலைப்பாடுகள் சார்ந்து வெளியிடப்பட்ட அறிக்கையில், சிரியா, மியன்மார், வெனிசுவெலா உள்ளிட்ட 22 நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் சார்ந்து தனது கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். எனினும் இலங்கையில் தொடர்ந்து இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எவ்வித கருத்துக்களும் இடம்பெறவில்லை.மாறாக அவ்வறிக்கையில் மனித உரிமை நிலைப்பாடுகள் சார்ந்து ஆக்கபூர்வமான முன்னேற்றங்கள் காணப்படும் ஆர்ஜன்டினா, அவுஸ்திரேலியா, துனிசியா உள்ளிட்ட 20 நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம்பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வறிக்கையானது தொடர்ச்சியாக இலங்கையில் தமிழரிற்கெதிராகவும், தமிழர் நிலப்பரப்பிலும் கட்டமைப்புசார் தமிழினவழிப்பை மேற்கொண்டுவரும் சிறிலங்கா அரசின் சர்வதேச நாடுகளுடனான கபடத்தனமான இராசதந்திர செயற்பாடுகளின் வெற்றியையே பறைசாற்றி நிற்கின்றது.

**ஐ.நா மனித உரிமைகள் சபையின் 38 வது கூட்டத்தொடர் 18.06.2018 அன்று ஆரம்பிக்கப்பட்டு 06.07.2018 வரை நடைபெற்றது.**

இவ்வறிக்கையின் மறுபக்கமானது 21ம் நூற்றாண்டின் மிகப்பெரிய மனிதப்பேரவலமான தமிழினவழிப்பையும், தொடர்ச்சியான கட்டமைப்புசார் இனவழிப்பையும் தமிழர்தரப்பானது சர்வதேச நாடுகளின் கவனத்திற்குக் கொண்டுசென்று, அவர்களது ஆதரவை இனவெறிச்சிங்கள அரசிற்கு எதிராக திருப்புவதில் தவறியுள்ளதையே கோடிட்டுக்காட்டுகின்றது. அத்துடன் தமிழர் இயக்கப் பிரதிநிதிகள் நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் ஈழத் தமிழர் பிரச்சனை சார்ந்து பல்வேறுபட்ட சந்திப்புக்களையும் மேற்கொண்டிருந்தனர். குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் மதிப்பிற்குரிய Seid al-Hussein அவர்களையும் தமிழர் இயக்கப் பிரதிநிதிகள் சந்தித்திருந்தனர்.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் மதிப்பிற்குரிய Seid al-Hussein அவர்களையும் தமிழர் இயக்கப் பிரதிநிதிகள் சந்தித்திருந்தனர்

அத்துடன் 38வது கூட்டத்தொடரின் 2ம் நாளான 19.06.2018 அன்று, மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சார்ந்து இடம்பெற்ற பொது விவாதத்தில் அங்கத்துவ மற்றும் பார்வையாளர் நாடுகளைத்தொடர்ந்து, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பொது விவாதத்தில் தமிழர் இயக்கத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு கருத்துத்தெரிவித்திருந்தனர். இதன்போது அவர்கள் முள்ளிவாய்க்கால் இனவழிப்பு இடம்பெற்று 9 வருடங்கள் கடந்தும் ஈழத்தமிழரிற்கு மறுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நீதியைச் சுட்டிக்காட்டியதுடன், மனித உரிமை சபையினால் கொண்டுவரப்பட்ட 30/1 தீர்மானத்தை சிறிலங்கா அரசு நடைமுறைப்படுத்தாது கால இழுத்தடிப்பு செய்வதுபற்றியும் அத்துடன் ஈழத்தில் தொடர்ந்து இடம்பெறும் வலிந்து காணாமலாக்கப்படுதல்,நில ஆக்கிரமிப்பு, இராணுவமயமாக்கல்,பாலியல் வன்கொடுமைகள், தடுப்பு முகாம்கள்,அரசியற்கைதிகள் விடயங்கள் தொடர்பாகவும் எடுத்துரைத்திருந்தனர்.

**இந்தியாவின் தமிழ் நாட்டில் ஸ்ரெர்லைட் ஆலைக்கெதிராக அமைதி வழியில் போராடிய மக்கள் 13 பேர் தமிழகப் பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டதற்கும், அங்கு மனித உரிமை ஆர்வலர்கள் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதிற்கெதிராகவும் சர்வதேச நீதி விசாரணை மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் கோரிக்கை**

விசேடமாக கடந்த 18.05.2018ல் தமிழினவழிப்பு நாளை நினைவுகூர்ந்தவர்களிற்கும், அதை ஒழுங்கமைத்தோரிற்குமெதிராக சிறிலங்கா அரசும் அதன் இராணுவமும் மேற்கொண்ட அச்சுறுத்தல்கள், விசாரணைகள் தொடர்பாகவும் சர்வதேசத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்றதுடன், மேற்கூறப்பட்ட விடயங்களிற்கான சர்வதேசநீதி விசாரணை மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் கோரப்பட்டது. அத்துடன் இந்தியாவின் தமிழ் நாட்டில் ஸ்ரெர்லைட் ஆலைக்கெதிராக அமைதி வழியில் போராடிய மக்கள் 13 பேர் தமிழகப் பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டதற்கும், அங்கு மனித உரிமை ஆர்வலர்கள் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதிற்கெதிராகவும் சர்வதேச நீதி விசாரணை மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் கோரிக்கை வைக்கப்பட்டது. அத்துடன் சுய நிர்ணய உரிமையும் தன்னாட்சியும் எனும் தலைப்பின் கீழ் பக்கவறை நிகழ்வுகளும் நடாத்தப்பட்டது.

# முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள்

## கீழ் வரும் பிரிவுகளில் பிரதான அவையில் வாய்மூல அறிக்கைகள் கீழ்க்குறிப்பிட்ட தலைப்புக்களில் சமர்ப்பிக்கப்பட்டது

**Item 2 :**Annual Report of United Nations High Commissioner for Human Rights and reports of the Office of the High Commissioner and the Secretary - General

10 Oral Statements

**Item 3 :**Promotion and Protection of all Human rights, Civil, Political, Economic, Social and Cultural Rights, including the Right to Development

05 Oral Statements

**Item 4 :**Human rights situations that require the Council's attention

10 Oral Statements

**Item 5 :**Human rights Bodies and Mechanisms

09 Oral Statements

**Item 6 :**Universal Periodic Review

9 Oral Statements



**OMDHD**

Human Rights Council
38th regular session of the Human Rights Council
18 June 2018 - 11 July 2018

**Item 10: Technical assistance and capacity-building (including oral update on Georgia) and oral update on Burundi under Item 2 - General Debate**

Read by : **Mme Sri Subajini Robert Thayalarajah**

Mr President,
The OHCHR has continued to provide the Government with technical assistance through its presence in Sri Lanka and the deployment of expert missions. It also provided financial and technical support.

Mr President,
The existence of crucial evidences of war crimes, crimes against humanity committed by Sri Lanka government in 2009 war are more than enough to call for independent international investigations.

However thus far there has only been calls for Sri Lanka to investigate itself in this august house. The past Resolutions against Sri Lanka or Resolutions jointly done with Sri Lanka here were not implemented by the Sri Lankan government.

The root cause of non implementation by the Sri Lankan government is a complete lack of political will and not capacity. President and the members of the UN Human Rights Council, mere technical assistance from the UN in the form of training, advice, financial and material support will not suffice, and may even serve to mislead or distract from the real issue if it is not accompanied by more substantive investigative, monitoring and reporting role by the UN.

9 years after the end of war against Eelam Tamils, it is time for the Human Rights Council to call for independent international investigations and for a referendum for Tamils to exercise their Right to Self Determination.

This referendum must be monitored by the UN and there must be demilitarisation in North and East before the referendum takes place. This is needed to end the protracted Genocide against Tamils in North and East of Sri Lanka.

Thank You

**Item 7 :**Human rights situation in Palestine and other occupied Arab Territories

2 Oral Statements

**Item 8 :**Follow-up and implementation of the Vienna Declaration and Program of Action

11 Oral Statements


**Item 9 :**Durban Declaration and Program of Action – Racial Discrimination
11 Oral Statements

**Item 10 :**Technical assistance and Capacity Building

7 Oral Statements

## 22 பக்கவறை நிகழ்வுகள் நடாத்தப்பட்டது

எம்மைப்போன்று தமது சுய நிர்ணய உரிமைக்காகப் போராடும் குர்திஸ்தான்,கமரூன், அலாஸ்கா, மேற்கு சகாரா, தெற்கு யெமன், காஷ்மீர், போன்ற நாடுகளும் எம்முடனிணைந்து பக்கவறை நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். **விசேடமாக இம்முறை ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் எமது பக்கவறை நிகழ்வில் கலந்துகொண்டு ஈழத்தமிழர் பிரச்சனை தொடர்பாக தனது கருத்தை தெரிவித்திருந்தார்.** இம்முறையும் இவ் பக்கவறை நிகழ்வுகளில் தமிழினவழிப்பில் நேரடியாகத் தொடர்புடைய பல இராணுவத்தினர் கலந்து கொண்டு காணாமலாக்கப்பட்டோ ரின் உறவுகளை அச்சுறுத்தி யதுடன் பல குழப்பங்களையும் ஏற்படுத்தியிருந்தனர். இவ் அச்சுறுத்தலின் விளைவாக காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளில் ஒருவர் மயக்கமுற்ற நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். இச் செயற்பாடு இனவெறிச் சிங்கள அரசின் கோர முகத்தை மீண்டுமொருமுறை சர்வதேசத்திற்குக் காட்டுவதாக அமைந்திருந்தது. இவ் விடையம் தொடர்பாக தமிழர் இயக்கம் மனித உரிமைகள் சபையில் முறையிட்டதுடன், அவர்கள் நாடு திரும்பும் போது அவர்களது பாதுகாப்பு ஐக்கிய நாடுகள் சபையினூடாக உறுதிப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தனர்.






# 15 இற்கும் மேற்பட்ட இராசதந்திரிகளுடனான சந்திப்புக்கள்





வலிந்து காணமல் ஆக்கபட்டோரின் கவனயீர்ப்பு போராட்டங்கள் 500 வது நாளை கடந்து தொடரும் இந் நிலையில், காணாமலாக்கப்பட்டோ ரின் உறவுகள் மனித உரிமை கள் சபையின் முன்பாகவும்காணமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களை தாங்கி காட்சிப்படுத்திய வண்ணம் போராட்டத்தை மேற்கொண்டு உலகின் கவனத்தை திருப்பியிருந்த னர். வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் காணாமலாக்கப்பட்டவர்களிற்கான மனித உரிமை சபையின் அதிகாரிகளையும், நாடுகளின் பிரதி நிதிகளையும் சந்தித்து தாம் எதிர் நோக்கும் அவலங்களை எடுத்துரைத்தனர். குறிப்பாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களிற்கான தீர்வு இன்றுவரை எதுவித முன்னேற்றமுமின்றி திட்டமிட்டு மறுக்கப்படும் இத்தருணத்தில் அதற்காக அமைதி வழிப் போராட்டங்களை முன்னெடுக்கும் தங்களிற்கு சிறீலங்கா அரசால் ஏற்படுத்தப்படும் உயிர் அச்சுறுத்தல்கள் தொடர்பாகவும் முறையிட்டிருந்தனர்

## இயக்கத்தின் தேவைகள்



மனிதவளம்



அறிவியல்



பொருளாதாரம்



தொடர்புகள்

### வங்கிக்கணக்கு

Tamilische Bewegung -Tamil Movement
Im Zübli- 4b
8730 Uznach

Kontonummer:
5543. 0182. 2001
IBAN: CH8608731554301822001
Bank Linth LLB AG

### தொடர்புகளுக்கு

Route de Peney 4, 1214 Vernier

+41 79 193 86 69

+41 77 973 61 34

+33 6 23 49 14 06

www.tamil-movement.org